*1994 ஏப்ரல் 8]*

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26 இலட்சத்தில் ஏற்கெனவே 7 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது மேலும் 6 இலட்சம் ஒதுக்கப்பட்டு அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு கோடி ரூபாய் செலவிலே கட்டப்பட்ட அந்த வள்ளுவர் கோட்டத்திற்கு நான்கில் ஒரு பங்கு, 26 இலட்சம் ரூபாயை புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். வள்ளுவர் கோட்டத்திலே திருக்குறள் முனுசாமி சிலை வைக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். அது வள்ளுவர் கோட்டம், வள்ளுவர் கோட்டத்திலே வள்ளுவர் சிலைதான் இருக்க வேண்டும். கண் இல்லாதவர்களுக்கு கண்ணாயிரம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது தனிப்பட்ட முறையில் உறுப்பினரைப் பாதிக்கும் குறிப்பு ஆகும். அது அவைக் குறிப்பிலே இருக்கக்கூடாது.

**மாண்புமிகு திரு. மு. தென்னவன்:** எப்பொழுதுமே மாண்புமிகு உறுப்பினர் திசை திருப்புவதில் கெட்டிக்காரர். ஆகவே, வள்ளுவர் கோட்டத்தில் வள்ளுவர் சிலைதான் வைக்க வேண்டும். வேறு எந்தச் சிலையும் அங்கே வைக்கப்பட மாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

வினா எண் 237, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*237--*

**ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலை அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.**

***20717-திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:***

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1994 ஏப்ரல் 8

திருநெல்வேலி--கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலையில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றித்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993-94-ம் கல்வியாண்டில் இப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்தக்கோரும் கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் ஒன்றியத்தில் ஊத்துமலை ஒரு கிராமத்துப் பகுதியாகும். அதேபோல், ஆலங்குளத்தில் மற்றும் ஊத்துமலையில் இரண்டு அரசு உயர்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. பல ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகளாகவே இருக்கின்றன. இந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. முடித்தவுடன் மேல்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டுமென்றால் நகரங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் செல்லும்போது கிராமத்துப் பிள்ளைகளுக்கு அது மிகவும் வசதியில்லாமல், அவர்களுக்கு வருமானம் குறைவாக இருப்பதனாலும் அவர்களுக்கு பெரிய துன்ப நிலை ஏற்படுகின்றது. அந்த மேல்நிலைப் பள்ளிகளுக்குச் சென்று சேரும்போது, அங்குள்ள பிள்ளைகளுக்குக்கூட சில நேரங்களில் டொனேஷன் போன்றவைகள் நிர்பந்தப்படுத்தி வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. மேலும் அந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கே அங்கே இடம், அதனால் இந்தக் கிராமத்துப் பிள்ளைகளுக்கு இடம் கொடுக்க மாட்டோம் என்று சொல்லக்கூடிய நிலை இருப்பதனால், இந்த வட்டாரத்தினுடைய- ஆலங்குளத்திலும், அதைப் போல, ஊத்துமலையிலும் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மேல்நிலைப்பள்ளி தொடங்குவதற்கு நிபந்தனைகள் இருக்கின்றன. ஒரு இலட்சம் ரூபாய் நிதி அரசுக்கு செலுத்த வேண்டும். இடவசதி இருக்க வேண்டும். மாணவர்கள் எண்ணிக்கை போதுமானதாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டு முன்மொழிவு வரப்பெற்றால் பகுதி-2 திட்டத்தின் கீழ் நிதிநிலை அடிப்படையிலும், கிராமத்து மாணவர்கள் நலன் கருதியும், உயர்மட்டக் குழு இந்தக் கோரிக்கையை பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*1994 ஏப்ரல் 8]*

**திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில நிபந்தனைகளை இங்கே சொன்னார்கள். அந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கே உள்ள பள்ளிகள் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் ஒரு இலட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இப்பொழுது 2 இலட்சம் ரூபாய் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்ட வேண்டுமென்று சொல்லப்படுகிறதே, அதைச் சற்றுக் குறைத்து, அதாவது கிராமத்து பிள்ளைகளுக்காவது, ஒரு 50 ஆயிரம் ரூபாயாக இந்தக் கட்டணத்தைக் குறைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இலட்சம் கட்ட வேண்டுமென்று எந்தப் பள்ளியிலும் நிபந்தனை விதிக்கப்படுவதில்லை. ஒரு மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு, மேம்படுத்தப்படுவதற்கு ஒரு இலட்சம் ரூபாய்தான் கட்ட வேண்டுமென்று நீண்ட நாட்களாக அரசு ஆணை இருக்கிறது. அதைக் குறைக்கின்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 238, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

*238--*

**போளூர் வட்டம், மாம்பட்டு நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்**

***21937–திரு. தா. வேடியப்பன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) போளூர் வட்டம், மாம்பட்டு கிராம நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. தா. வேடியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சார்பில் கடந்த ஆண்டு என்னுடைய போளூர் தொகுதியில்